2015 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு நில எடுப்புப் பணி நடைபெற்று வருகின்றது. அப்பணி முடிவுற்றவுடன் விரைந்து சாலை அமைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகருக்குச் சுற்றுச்சாலை அமைக்கப்படுமா? போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்றுச் சாலை அமைக்கப்படுமா? ஏற்கெனவே 2013-2014-லிலே குடியாத்தம் மையப் பகுதியில் ஓடுகின்ற கவுண்டன்ய ஆற்றின் கரைமீது மாற்றுச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றுதான் கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் உள்ளது என்று கூறினார்கள். அந்த ஆய்வை முடித்து, இந்த ஆண்டே அந்த மாற்றுச் சாலை அமைக்கப்படுமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் புறவழிச் சாலை அமைக்க திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. தேசிய நெடுஞ்சாலை 234 இந்தப் புறவழிச் சாலையில் இணைவதால், தேசிய நெடுஞ்சாலை அலகுமூலம் புறவழிச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

**திரு. ஏ.கே.டி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றம் நகரில் பஸ் நிலையம் அருகில் புதிய இரயில் மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. அதனால் பஸ் நிலையத்திற்குச் செல்லும் சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பாலத்தின் இருபுறமும் சர்வீஸ் சாலை அமைத்து, பஸ் நிலையம் செயல்பட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருபுறமும் சர்வீஸ் சாலை அமைக்க வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். அரசு அதை ஆய்வு செய்து, அதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ள முயற்சி செய்யும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை புறவழிச் சாலைத் திட்டத்தின்கீழ், ரூ.16 கோடி மதிப்பீட்டில் இரண்டாவது கட்ட சாலைப் பணிகள் தொடங்கப்படும் என்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலே அறிவித்தார்கள். தற்பொழுது அதனுடைய நிலைப்பாடு என்னவென்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை பகுதியில் இரண்டாம் கட்ட புறவழிச் சாலை அமைக்கின்ற பணி நடைபெறுவதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது. நிலம் எடுக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே,*

நில எடுப்புப் பணிகள் முடிவடைந்த பின்னர், அந்தப் பணிகளைத் துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

4—

**தொழிற்பேட்டை**

***30449—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, அந்தப் பகுதியிலே புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், அந்தப் பகுதியிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பரிந்துரையோடு, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நல்ல, சிட்கோ மூலமாகத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பார்கள். ஆண்டவருக்கு இணையான தீர்ப்பு வழங்கும் சனநாயகத்தினுடைய இறுதி எஜமானர்களாகிய மக்கள் என்றென்றும் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பக்கம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளார்கள் என்பதை மீண்டும் மீண்டும் நாட்டு மக்களுக்கு நிரூபித்து வரும் இத்தருணத்தில், சோதனைகளை எதிர்கொண்டு, அவற்றை வென்று சாதனை படைக்கும் ஆற்றல் கொண்ட எம் தலைவியாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*எனது தொகுதி மேட்டுப்பாளையம், மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமைந்திருக்கிற ஒரு பகுதி. மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் மிகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற ஒரு பகுதியாக இருக்கின்றது. ஏற்கெனவே இந்தப் பகுதியிலே தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய செயற்கைப் பட்டு தொழிற்சாலை-*South India Viscose Limited, *மிகப் பெரிய வார்ப்பு இரும்புத் தொழிற்சாலையான* Sri Ramakrishna Steelndustries, Madras Forging, Rajalakshmi Mill *என 4 தனியார் நிறுவனங்கள் இயங்கி வந்தன. ஏறத்தாழ இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேரடியாகவும், ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மறைமுகமாகவும் இந்நிறுவனங்களால் பயன்பெற்ற ஒரு தொகுதியாக கடந்த காலங்களிலே இருந்தது. ஏதோ ஒரு காரணத்தினாலே, இன்றைக்கு அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம், மூடப்பட்ட நிலையில், தொழில் வளமில்லாத ஒரு சூழ்நிலையிலே, இந்தப் பகுதியிலே ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்கும்பட்சத்தில் தொழில் வளம் பெறுவதற்கு ஏ வாய்ப்பாக இருக்கும். தொழில் முனைவோர்கள் தாங்களாக முன்வருவார்களேயானால், தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்கப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்றார்கள். மேலும், மத்திய அரசு நிறுவனத்திற்குச் சொந்தமான* Government Press *என்ற நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலே ஏறத்தாழ 150 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலம்*

எந்தவிதமான பயன்பாடுமில்லாமல், சுமார் 100 ஆண்டுக் காலமாக தரிசு நிலமாக உள்ளது. மேற்படி அந்த இடத்தைக் கையகப்படுத்தி, அந்தப் பகுதியிலே தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், நாங்கள் சார்ந்திருக்கின்ற இந்தத் துறையின் மூலமாக, குறிஞ்சி என்கிற இடத்தில் 88.43 ஏக்கர் நிலத்தில் ஒரு தொழிற்பேட்டையும், மலுமிச்சம்பட்டி என்ற இடத்திலே 36.14 ஏக்கர் நிலத்தில் ஒரு தொழிற்பேட்டையும் இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தத் தொழிற்பேட்டைகளின் மூலமாக சுமார் ஐயாயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள். இந்தத் தொழிற்பேட்டைகளின் வாயிலாக ரூபாய் 85 கோடி அளவுக்கு உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேட்டுப்பாளையத்திலே மாத்திரம் தேயிலைத் தொழில் வளர்ச்சிக்காக ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் ஒரு தேயிலைக் குழுமம் ஏற்படுத்த வேண்டுமென்று மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அந்தப் பணிகளெல்லாம் இன்றைக்குச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நிலம் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி நிலம் இருக்கும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து பேசி அந்தப் பகுதியிலே சிட்கோ மூலமாகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துருவைப் பெற்று, எதிர்காலத்திலே அந்தப் பகுதியிலே தொழிற்பேட்டை அமைத்துத் தரப்படும் என்று அறிவித்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர், தனியார் தானாகவே தொழிற்பேட்டை அமைக்க முன்வந்தால், இந்த அரசு அதை ஊக்குவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். தனியார் தொழிற்பேட்டைகள் தொடங்குவதற்கு என்னென்ன அடிப்படை அம்சங்கள் தேவை என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, தனியார் முன்வருவார்களேயானால், அவர்களுக்கும் சிட்கோ மூலமாக நிதி உதவி அளிக்கப்பட்டு, பல்வேறு இடங்களிலே தொழிற்பேட்டைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், தனியார் முன்வருவார்களேயானால், சிட்கோ மூலமாகத் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

2015 பிப்ரவரி 18]

5—

## சொந்தக் கட்டடம்

***49728—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, பி.என். பட்டி பேரூராட்சி, 4-வது வார்டு, துறையூர் பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் வெற்றி! எதிலும் வெற்றி! எப்போதும் வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிச் சரித்திரம் படைத்திட்ட எங்கள் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, பி.என். பட்டி பேரூராட்சி, 4-வது வார்டு, துறையூர் பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் தேர்வு செய்யப்பட்டு அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்துள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் மொத்தம் 278 அங்கன்வாடி மையங்கள் உள்ளன. இவற்றில், 158 அங்கன்வாடி மையங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 120 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. சட்டமன்ற